

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் சார்பில் கொளத்தூர், கணேஷ் நகரில் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் 230/33 கி.வோ. வளிம காப்பு துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கொளத்தூர், வீனஸ் நகரில் 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற்று நிலையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# எத்தகைய மழையையும் எதிர்கொள்ளத் தயார்!

## கொளத்தூரில் பல்வேறு பணிகளைப் பார்வையிட்ட பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 6-

**சென்னை கொளத்தூர் தொகுதியில் ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற பணிகளையும் தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் பருவமழைக்கு முன்னதாகவே 12 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளதாக தெரிவித்தார். பரவலாக மழை பெய்துள்ள போதிலும் சென்னையில் எந்த இடத்திலும் மழைநீர் தேங்கவில்லை என்று கூறிய முதலமைச்சர், எத்தகைய மழை வந்தாலும் அதை எதிர்கொள்ள அரசு தயாராக இருப்பதாக தெரிவித்தார்.**

கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.355.23 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, ரூ.8.45 கோடி செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.3.25 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 8 கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 3 கோடியே 25 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சீனிவாச நகர் 3வது பிரதான சாலையில் புதிதாக கட்டப்படவுள்ள சென்னை துவக்கப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், கணேஷ் நகரில் அமைக்கப்பட்டு வரும் 230/33 கி.வோ. துணை மின் நிலையம், வீனஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் வெளியேற்று நிலையத்தின் செயல்பாடுகள், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் நவீன சந்தை, தணிகாசலம் கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் சிறப்பு மருத்துவமனைக் கட்டுமானப் பணிகள், என மொத்தம் 355 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிடுதல்!**

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் சார்பில் கொளத்தூர், கணேஷ் நகரில் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் 230/33 கி.வோ. துணை மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த துணை மின் நிலையம் அமைக்கப்படுவதன் மூலம், கொளத்தூர், பெரியார் நகர், அன்னை நகர், நேர்மை நகர், கணேஷ் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு சீரான மின்சாரம் கிடைத்திடும்.

**கழிவுநீர் வெளியேற்று நிலையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்!**

சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கொளத்தூர், வீனஸ் நகரில் 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கழிவுநீர் வெளியேற்று நிலையத்தின் செயல்பாடுகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிலையத்தின் மூலம் வீனஸ் நகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு பாதாள குழாய் மூலம் கழிவுநீர் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

**முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்!**

கொளத்தூர், பள்ளி சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிங்கார சென்னை 2.0 நிதியின் கீழ், பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆரம்ப பள்ளியில் 5 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் இரண்டு குழந்தைகள் வளர்ச்சி மையங்கள், ஜி.கே.எம். காலணி 27வது தெருவில் 2 கோடியே 55 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வகுப்பறைகள், பணியாளர் அறை, கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சென்னை துவக்கப் பள்ளிக் கட்டடம்;

கொளத்தூர் தொகுதியில் பல்வேறு தெருக்களில் 86 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 உயர் மின்கோபுர விளக்குகள்;

என மொத்தம் 8 கோடியே 45 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சீனிவாச நகர் 3வது பிரதான சாலையில் 3 கோடியே 25 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள சென்னை துவக்கப் பள்ளிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக, முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்.

**நவீன சந்தை கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்**

அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூர் நேர்மை நகரில் 0.73 ஏக்கர் பரப்பளவில் 23 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சந்தையின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நவீன சந்தை கட்டடமானது, அடித்தளம், தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன், மொத்தம் 62,200 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இக்கட்டடத்தின் அடித்தளத்தில் வாகனங்கள் நிறுத்தும் வசதியும், தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் மொத்தம் 99 கடைகளும் அமைக்கப்படவுள்ளது. இக்கட்டிடத்தில் கழிப்பறை வசதிகள், மின்தூக்கி வசதிகள், 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி, 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தீ அணைப்பு தொட்டி மற்றும் 2500 லிட்டர் குடிநீர் சுத்திகரிப்பு திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட உள்ளது.

**தணிகாசலம் கால்வாய் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்!**

நீர்வள ஆதாரத் துறை சார்பில் அயனாவரம் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாசலம் நகரில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபரிநீர் கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தணிகாசலம் கால்வாய் மொத்தம் 3050 மீட்டர் நீளம் கொண்டது. கடந்த பருவமழையின்போது தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாய் அமைந்துள்ள பகுதிகளில் பெரும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டபோது, முதலமைச்சர் அவர்கள் 9.11.2021 அன்று வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு, வெள்ள பாதிப்புகளை தவிர்க்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதை தொடர்ந்து, பருவமழைக் காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுக்க 91.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தணிகாசலம் நகர் உபரிநீர் கால்வாயினை திறந்தவெளி கால்வாய் மற்றும் மூடிய வடிவிலான கால்வாயாக மேம்படுத்தும் பணியினை முதலமைச்சர் அவர்கள் 30.08.2023 அன்று தொடங்கிவைத்தார். இதன்மூலம் தணிகாசலம் நகர் கால்வாயினை அகலப்படுத்தி கூடுதலாக உபரிநீர் செல்லும் வகையில் வழிவகை செய்யப்படவுள்ளது. 700 மீட்டர் நீளத்திற்கு 4 மீட்டர் அகலத்திற்கு கான்கிரீட் கால்வாயாகவும். 780 மீட்டர் நீளத்திற்கு 4 மீட்டர் அகலத்தில் திறந்தவெளியாகவும், 4 மீட்டர் அகலத்தில் மூடிய வடிவத்திலும், 1010 மீட்டர் நீளத்திற்கு 6 மீட்டர் அகலத்தில் திறந்த வெளியாகவும், 4 மீட்டர் அகலத்தில் மூடிய வடிவிலும், 220 மீட்டர் நீளத்திற்கு 4 மீட்டர் அகலத்தில் மூடிய வடிவிலான கால்வாயாகவும், 160 மீட்டர் நீளத்திற்கு 6 மீட்டர் அகலத்தில் திறந்தவெளி கால்வாயாக அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் சிறப்பு மருத்துவமனை கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்!**

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் 109 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனையில் கட்டப்பட்டு வரும் சிறப்பு மருத்துவமனையானது, தீவிர சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, விபத்து காய சிகிச்சைப் பிரிவு, பிரசவ அறை, முழு உடற் பரிசோதனை ஆய்வகம், நீரிழிவு நோய் புறநோயாளிகள் பிரிவு, சிறுநீரகவியல், இரத்த நாளவியல், தோல் மருத்துவம், மனநல மருத்துவம், நரம்பியல் மருத்துவம், புற்றுநோயியல் கண் மருத்துவப் பிரிவுகள், இருதயவியல் புறநோயாளிகள் உள்நோயாளிகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆஞ்சியோ அறுவை அரங்கம், இ.சி.ஜி, எக்கோ மற்றும் டிரெட்மில் சோதனை, போதை மறுவாழ்வு மையம், மருத்துவமனை நிர்வாக அலுவலகம், கருத்தரங்குக் கூடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், எஸ்.சுதர்சனம், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா. கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை மாநகராட்சி மேயர் தேர்தல்

# தி.மு.க. சார்பில் ரங்கநாயகி போட்டி!

கோவை, ஆக.6-

கோவை மாநகராட்சியின் மேயர் தேர்தல் இன்று (6ந்தேதி) நடைபெற உள்ளது. இந்நிலையில், கோவை சுகுணா திருமண மண்டபத்தில் அமைச்சர்கள் கேஎன். நேரு, முத்துச்சாமி ஆகியோர் தலைமையில் மாமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, கோவை மாநகராட்சியின்தி.மு.க.கூட்டணியின் மேயர் வேட்பாளராக, 29 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரங்கநாயகி



அறிவிக்கப்பட்டார்.

தரணி நகர் 8 வது வீதி, கணபதிபுதூர் பகுதியைச் சேர்ந்த 29 வார்டு மாமன்ற உறுப்பினராகிய ரங்கநாயகி, இவர் 10ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது கணவர் பெயர் ராமச்சந்திரன், 29 வது வார்டு தி.மு.க. செயலாளராக உள்ளார். இவருக்கு குகன் என்ற ஆண் குழந்தையும், வாகிணி என்ற பெண் குழந்தையும் உள்ளது.

மேலும் பேட்டியின் போது, அமைச்சர் கே. என்.நேரு கூறுகையில்;

கோவை மாநகராட்சியின் மேயர் வேட்பாளராக ரங்கநாயகி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மாநகராட்சிக்குத் தேவையான பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. இன்னும், மக்களின் தேவைகள் அறிந்து பணிகள் வேகப்படுத்தப் படும் என தெரிவித்தார். நாளை கோவை மாநகராட்சி தேர்தல் நடைபெறும் என கூறினார்.

இந்த நிகழ்வின்போது, அமைச்சர் முத்துச்சாமி, மாவட்ட செயலாளர்கள் நா.கார்த்திக், தொஅ.ரவி, தளபதி முருகேசன், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, துணைமேயர் வெற்றிச்செல்வன் மற்றும் மண்டல தலைவர்கள், நிலைக் குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## நெல்லை மாநகராட்சி புதிய மேயராக

# 25 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோ.ராமகிருஷ்ணன் தேர்வு!

## மாநகராட்சி ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா அறிவிப்பு!

நெல்லை, ஆக.6-

நெல்லை மாநகராட்சி புதிய மேயராக 25 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோ.ராமகிருஷ்ணன் தேர்வு செய்யப்பட்டார். அதற்கான அறிவிப்பை மாநகராட்சி ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா தெரிவித்தார்.

நெல்லை மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் கடந்த 3ஆம் தேதி தனது பதவியை சொந்த காரணங்களுக்காக ராஜினாமா செய்தார்.அதனைத் தொடர்ந்து காலியாக உள்ள திருநெல்வேலி மாநகராட்சி மேயர் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்தது. மேயர் வேட்பாளராக கோ.ராமகிருஷ்



ணனை தலைமைக் கழகம் அறிவித்தது.

அதன்படி நெல்லை மாநகராட்சி மைய மண்டபத்தில் நேற்று 5ஆம் தேதி காலை 10 30 மணி அளவில் தேர்தலுக்கான வேட்பு மனு துவங்கப்பட்டது. மேயர் வேட்பாளர் ராமகிருஷ்ணன் தனது வேட்புமனுவை மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ராவிடம் தாக்கல் செய்தார்.அவரை எதிர்த்து 6 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பவுல்ராஜ் (கட்சியிலிருந்து தற்காலிகமாக சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்) வேட்பு மனு தாக்கல் செய்தார்.

காலை 11:30 மணிக்கு மேல் வாக்குப்பதிவு நடைபெற்றது.மொத்தம் உள்ள 55 மாமன்ற உறுப்பினர்களில் தி.மு.க கூட்டணிக்கு 51 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் கழக உறுப்பினர்களாக 41 பேர் உள்ளனர்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற மேயர் தேர்தலில் 1மாமன்ற உறுப்பினர் தவிர 54 மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.கழக வேட்பாளர் ராமகிருஷ்ணன் 30 வாக்குகளும், பவுல்ராஜ் 23 வாக்குகளும் பெற்றனர், 1 வாக்கு செல்லாதவை என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர் மாநகராட்சி ஆணையர் சுகபுத்ரா கழக வேட்பாளர் கோ. ராமகிருஷ்ணன் வெற்றி பெற்றதாக அறிவித்தார்.அதனைத் தொடர்ந்து அதற்கான சான்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், துணை மேயர் ராஜ், முன்னாள் மேயர் சரவணன் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.